மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை
அசல் வழக்கு எண். 55/2019

**2025–ம் ஆண்டு ஜனவரி மாதம் 03–ம் நாள் வெள்ளிக் கிழமை** பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) **திருமதி. P.தேன்மொழி, உதவியாளர்** என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வராஜ் | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார் பெயர் | : செங்கமலை | வட்டம் | : வேப்பந்தட்டை |
| கிராமம் | : தழுதாழை | வயது | : 52/2025 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**

(i) நான் தற்போது Bangalore ல் வசித்து வருகிறேன். கடந்த 20 ஆண்டுகளாக Bangalore ல் வசித்து வருகிறேன். எனது தாயார் பெயர் அங்கம்மாள். 07.07.1980 ம் தேதியில் எனது தாயார் அங்கம்மாள் அய்யாக்கண்ணு, பிச்சைபிள்ளை ஆகியோர்களிடமிருந்து தழுதாழை கிராம ப.ச.எண்.171/2 ல் கண்ட சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதன் புதிய ச.எண்.241/30 என்றால் சரிதான். அதன் கிரைய பத்திரத்தில் என்ன நான்கெல்லை காட்டப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. அசல் கிரைய ஆவணம் என் வசம் உள்ளது என்றால் சரிதான். அந்த ஆவணத்தை தேவைப்படும் பட்சத்தில் நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். அந்த கிரைய பத்திரத்தில் நான்கெல்லையில் கிழமேல் வீதிக்கும் வடக்கு, தென்வடல் சந்துக்கும் மேற்கு, கோவிந்தன் மனைக்கும் தெற்கு, நடைபாதைக்கும் கிழக்கு என்று காட்டப்பட்டுள்ளது என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். மேலும் அதில் கிழமேல் ஜாதியடி 20 என்றும், தென்வடல் ஜாதியடி 21 என்றும் காட்டப்பட்டுள்ளது என்றால் ஆவணங்களை பார்த்தால் தான் தெரியும். வாதி தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வாய்தா அளித்து ஒத்திவைக்கப்படுகிறது.